செ.வெ.எண்: 28/2021 நாள்: 15.07.2021

## செய்தி வெளியீடு

### உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத், இஆப அவர்கள் ஆய்வு செய்தார்.

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத், இஆப அவர்கள் இன்று (15.07.2021) ஆய்வு செய்தார்.

உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை முறை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். உள்நோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு, மருந்து மற்றும் அடிப்படை வசதிகள் குறித்தும், வெளிநோயாளிகள் பிரிவில் சிகிச்சைக்கு வரும் பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை வளகாத்தில் அமைக்கப்படவுள்ள ஆக்ஸிஜன் செறிவூட்டி கட்டுமானப்பணிகளை பார்வையிட்டார். இந்த செறிவூட்டி மூலம் ஒரு நிமிடத்திற்கு 500 லிட்டர் ஆக்ஸிஜன் நோயாளிகளுக்கு வழங்க முடியும்.

இதனைத் தொடர்ந்து குடிமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தமிழக அரசின் மூலம் பொதுமக்களுக்கு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும், வெளி மற்றும் உள் நோயாளி பிரிவில் சிகிச்சை பெற்று வரும் பொது மக்களிடம் குறைகளை கேட்டறிந்து, தேவையான மருத்துவ சிகிச்சைகளை விரைவாக வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் , இஆப அவர்கள் அறிவுரைகளை வழங்கினார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு உறுதி மொழியினை மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் எடுத்துக்கொண்டனர்.

இந்த ஆய்வின் பொது உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.கீதா, உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**